# Government of Tamil Nadu
# Tami Nadu Health Systems Project

**From**
Dr. S. Uma, I.A.S.
Project Director,
Tamil Nadu Health Systems Project
DMS Annex Building,
Teynampet,
Chennai -600006

**To**
The Secretary to Government,
Health and Family Welfare
Department,
Secretariat,
Chennai - 600009.

**Letter No. PD-01/TNHSP/2026 Dated:03.09.2026**

Respected Sir / Madam,

**Sub:** Monitoring Officer - Appointment of Monitoring Officers Perunthalaivar Kamarajar Breakfast Scheme – Pilot Trial in Vellore District on 11.09.2026 – Permission to leave Headquarters on 10.09.2026 afternoon – Requested – Regarding.

**Ref:**

1. G.O.Rt.No.2367 Public (Special-A) Department, Dated:23.06.2025.
2. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டத்தின் கீழ் 11.09.2026 அன்று நடத்தப்படவுள்ள முன்னோட்ட சோதனைக்கான திருத்திய நிலையான வழிகாட்டி செயல்முறைகள் (ந.க.எண். 252/PC–1/2026 நாள் 03.09.2026)

*******

As per the reference 1st cited, Government has appointed as the Monitoring Officer for Vellore District. As per the reference 2nd cited, the revised Standard Operating Procedures for the expansion of the Perunthalaivar Kamarajar Breakfast Scheme (PKBFS) have been communicated, and a pilot trial is scheduled to be conducted on 11.09.2026.

In this regard, I may kindly be permitted to leave Headquarters on 10.09.2026 afternoon and return on 11.09.2026 for the above purpose, as per Chief Secretary sir instructions given on 02.09.2026 in Video Converence.

With regards,

3/9/26

Dr.S.Uma, IAS,
Project Director
Tamil Nadu Health System Project

**Copy to:**

The District Collector, Vellore District.

**Copy submitted to:**

1. The Chief Secretary to Government,
   Government of Tamil Nadu, Chennai – 09.
2. The Secretary to Government, Public (Special-A) Department,
   Secretariat, Chennai-09

**TAMIL NADU CORPORATION FOR DEVELOPMENT OF WOMEN LTD.,**

(A GOVERNMENT OF TAMIL NADU UNDERTAKING)

Annai Teresa Mahalir Valagam, 1st Floor, Valluvarkottam High Road,
Nungambakkam, Chennai - 600 034.

ந.க. எண்: 252/PC-1/2026 நாள்: 03.09.2026

பெறுநர்

மாவட்ட ஆட்சியர்,
அனைத்து மாவட்டங்கள் (சென்னை நீங்கலாக).

அய்யா/அம்மையீர்,

**பொருள்:** தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் – பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டம் விரிவாக்கம் – திருத்திய நிலையான வழிகாட்டி செயல்முறைகள் – அனுப்பப்பட்டது – 11.09.2026 அன்று சமையல் செய்து முன்னோட்ட சோதனை நடத்துவது – சார்பாக.

**பார்வை :**

1. அரசாணை நிலைஎண்: 20. சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4-1) துறை, நாள் 15.07.2026.
2. இவ்வலுவலக கடித ந.க.எண்.252/PC-1/2026, நாள். 06.08.2026
3. அரசு தலைமைச் செயலாளர் அவர்களால் 24.08.2026 அன்று நடத்தப்பட்ட ஆய்வுக்கூட்ட அறிவுரைகள் மற்றும் 02.09.2026 மாவட்ட ஆட்சித் தலைவர்களின் காணொலி ஆய்வுக்கூட்ட அறிவுரைகள். (அரசு கடித எண்.14737293/SW4-1/2026-3. நாள். 02.09.2026).

******

பார்வை 1-ல் காணும் அரசாணையின்படி பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டம் 17.09.2026 முதல் 6ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு விரிவாக்கம் செய்யப்பட உள்ளதால், அனைத்து மாவட்டங்களிலும் திட்டம் தங்குதடையின்றி முறையாக செயல்படுத்திட திருத்திய நிலையான வழிகாட்டி செயல்முறைகள் பார்வை 2-ல் காணும் இவ்வலுவலக கடித வழி அனுப்பப்பட்டது.

தற்போது 24.08.2026 (ம) 01.09.2026 ஆகிய தேதிகளில் அரசு தலைமைச் செயலாளர் அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டங்களில் பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டத்தின் விரிவாக்கம் குறித்து பின்வரும் இனங்களில் கவனம் செலுத்தி உரிய முன்னேற்பாடுகள் செய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

1. 05.09.2026-க்குள் அனைத்து பள்ளிகளிலும் உணவுப் பொருட்கள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் மற்றும் இணை பதிவாளர் கூட்டுறவு துறையிலிருந்து பள்ளிகளுக்கு வரப்பெற்றுள்ளதை உறுதி செய்ய வேண்டும்.
2. பெறப்பட்ட உணவுப் பொருட்கள் அனைத்தும் பாதுகாப்பான முறையில் சேமித்து வைக்கப்பட வேண்டும். சமையலறை மற்றும் உணவுப் பாதுகாப்பு

அறை ஆகியவை போதிய காற்றோட்டம் மற்றும் வெளிச்சத்துடன் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

3. திட்டம் விரிவாக்கப்பட உள்ள பள்ளிகளில், மதிய உணவு அருந்தும் மாணவர்கள் பயன்படுத்தும் தட்டுகளை காலை உணவு அருந்திடவும் பயன்படுத்திக் கொள்ளலாம்.
4. எக்காரணம் முன்னிட்டும் தகுதியான எந்தவொரு பள்ளியும், மாணவர்களும் காலை உணவு வழங்கப்படுவதிலிருந்து விடுப்படவில்லை என்பதை உறுதி செய்ய வேண்டும்.
5. குடிநீர் வசதி மற்றும் மின்வசதி ஆகியவை தங்குதடையின்றி செயல்படுவதை கண்காணித்திட வேண்டும்.
6. உரிய காலக்கெடுவிற்குள் பாத்திரங்கள் மற்றும் சமையல் எரிவாயு இணைப்புகள் கொள்முதல் செய்யப்பட்டு சமைப்பதற்கு ஏதுவாக தயார்நிலையில் இருத்தல் வேண்டும்.
7. பரிந்துரைக்கப்பட்ட உணவு பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் தரக் கட்டுப்பாட்டு விதிமுறைகள், உணவுப் பொருட்களை கொள்முதல் செய்வது, சேமித்து வைப்பது, சமைப்பது மற்றும் பரிமாறுவது ஆகிய அனைத்து நிலைகளிலும் முறையாகப் பின்பற்றப்பட வேண்டும்.

காலை உணவுத் திட்ட விரிவாக்கம் 17.09.2026 அன்று தொடங்கப்படவுள்ளதால், சோதனை ஓட்டமாக (Trial run) 11.09.2026 அன்று, திட்டம் புதிதாக செயல்படுத்தப்படவுள்ள அனைத்து பள்ளிகளிலும் உணவு சமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது. அன்றைய தினம் ஊரக மற்றும் பேரூராட்சி பகுதிகளில் கீழ்க்கண்டுள்ளவாறு அமைக்கப்பட்டுள்ள முதன்மைக் குழு உறுப்பினர்கள் முன்னிலையில் சமையல் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சமையல் பொறுப்பாளர்கள் அனைவரும், முதன்மைக்குழு உறுப்பினர்கள் மற்றும் சமையலர்களின் எண்ணிக்கைக்கேற்ப உணவுப் பொருட்களின் அளவினை கணக்கிட்டு உணவு சமைத்து வழங்கிட தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக்குழு உறுப்பினர் அனைவரும் சமைத்த உணவின் தரத்தினை ஆய்வு செய்து குறைகள் ஏதுமிருப்பின் அதனை சரிசெய்திட அறிவுரைகள் வழங்கிட வேண்டும்.

அ) ஊரகப் பகுதிகளில் முதன்மைக் குழு உறுப்பினர்கள் விவரம்.

1. ஊராட்சி மன்ற தலைவர் / தொடர்புடைய ஊராட்சியின் தனி அலுவலர்
2. அரசுப் பள்ளித் தலைமை ஆசிரியர்/அரசு உதவிப்பெறும் பள்ளி முதல்வர்.
3. பள்ளி மேலாண்மை குழுவின் தலைவர்.
4. பள்ளி மேலாண்மை குழுவின் ஒரு பிரதிநிதி.
5. ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் செயற்குழு உறுப்பினர் ஒரு பிரதிநிதி.

ஆ) பேரூராட்சி பகுதிகளில் முதன்மைக் குழு உறுப்பினர்கள் விவரம்.

1. பேரூராட்சி நகர்மன்ற தலைவர் / தொடர்புடைய பேரூராட்சியின் செயல் அலுவலர்

2. அரசுப் பள்ளித் தலைமை ஆசிரியர்/அரசு உதவிப்பெறும் பள்ளி முதல்வர்.
3. பள்ளி மேலாண்மை குழுவின் தலைவர்.
4. பள்ளி மேலாண்மை குழுவின் ஒரு பிரதிநிதி.
5. பகுதி அளவிலான கூட்டமைப்பின் செயற்குழு உறுப்பினர் ஒரு பிரதிநிதி

திட்டத்தின் தடையற்ற தொடக்கத்தை உறுதி செய்வதற்காக, கொள்முதல், சமையல், உணவு பரிமாறுதல், உணவின் தரம், அளவு, சுகாதாரம், விநியோக ஏற்பாடுகள் மற்றும் உட்கட்டமைப்பு உள்ளிட்ட அனைத்து அம்சங்களும் முறையாக உள்ளனவா என்பதை உறுதி செய்யும் வகையில், 11.09.2026 அன்று விரிவான முன்னோட்ட செயல்பாட்டு சோதனை (Pilot Trial) மேற்கொள்ளப்பட வேண்டும். இச்சோதனை ஓட்டத்தின் போது கண்டறியப்படும் குறைபாடுகள் / தவறுகள் ஏதேனும் இருப்பின், அவை உடனடியாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

சோதனை ஓட்டம் நடைபெறும் நாளன்று, கண்காணிப்பு அலுவலர்கள் மாவட்டங்களுக்கு நேரில் சென்று, உணவின் தரம், அளவு, சுகாதாரம், சமையல் மற்றும் உணவு பரிமாறும் ஏற்பாடுகள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பயனாளிகளின் கருத்துகள் ஆகியவற்றை ஆய்வு செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. திட்ட விரிவாக்கத்தைத் தொடங்குவதற்கான அனைத்து முன்னேற்பாடுகளையும் கண்காணிப்பு அலுலவர்கள் முழுமையாக ஆய்வு செய்து, திட்டத்தைத் தொடங்குவதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் முறையாக மேற்கொள்ளப்பட்டு தயார் நிலையில் இருப்பதை உறுதி செய்வார்கள் எனவும், பார்வை 3-ல் காணும் ஆய்வு கூட்ட நடவடிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இவ்விவரங்களை முன்னதாகவே பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவித்து, பள்ளி தலைமையாசிரியர்/ ஆசிரியர் பணி நடைபெறும் இடத்தில் இருப்பதை உறுதி செய்திட வேண்டும் எனவும் சோதனை ஓட்டத்தினை (Pilot Trial) முடித்த பிறகு அந்நிகழ்வு தொடர்பான அறிக்கையினை இவ்வலுவலகத்திற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/-xxxxx
மேலாண்மை இயக்குநர்
த.ம.மே.நிறுவனம்

//உண்மை நகல்//

கூடுதல் இயக்குநர் (P&C)
த.ம.மே.நிறுவனம்

நகல்

1. கூடுதல் ஆட்சியர்/திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, அனைத்து மாவட்டங்கள்.
2. திட்ட இயக்குநர்,
மாவட்ட இயக்க மேலாண்மை அலகு
அனைத்து மாவட்டங்கள் (சென்னை நீங்கலாக).
3. மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர், (சத்துணவு)
அனைத்து மாவட்டங்கள்.